மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: அநேக கிராமங்களிலே இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களிலே கிளார்க்குகள் இருக்கிறார்கள். எந்த கிராம கூட்டுறவு சங்கத்திலேயாவது உரம் தட்டுப்பாடு இருப்பதாகத் தெரிந்தால் உடனடியாக அந்த சங்கத்திற்கு உரம் தரப்படுகிறது. அதற்காக வாரா வாரம் புள்ளி விவரங்களை சேகரித்து வருகிறோம். ஆங்காங்கே இருக்கும் ரீஜினல் ஆபீசர், கலெக்டர் போன்றவர்கள் அவற்றை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். தட்டுப்பாடு ஏற்படுகின்ற இடங்களிலே தாமதம் இல்லாமல் உரம் அனுப்பப்படுகிறது.

திரு. பெ. சீனிவாசன்: இந்த உரத்தின் விலை விவசாயிகள் இப்பொழுது வாங்கி உபயோகிக்க முடியாத அளவிற்கு அதிகமாக இருக்கிறது. இருந்தாலும் வேறு வழியின்றி வாங்கிப் போடுகிறார்கள். அப்படி போடும்பொழுது பூச்சியினால் விவசாயம் கெட்டு, விளைச்சல் வராமல் இருக்கின்ற குறிப்பிட்ட உரம் போட்ட நிலத்திற்கு நஷ்ட ஈடு தர அந்த பண்டிலே இருந்து அரசாங்கம் ஒதுக்கீடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தற்பொழுது அந்த நிதி இன்னின்ன காரியங்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்று இங்கே தாக்கல் செய்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பயிர் விளையாமல் போகுமானால் அதற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்பது இந்த அறிக்கையில் இல்லை.

திரு. பெ. சீனிவாசன்: விவர அறிக்கையில் இல்லாததால்தான் நான் கேட்கிறேன்; அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: ஏற்கெனவே உத்தரவு போட்டிருப்பதைத்தான் இதிலே குறிப்பிட்டிருக்கிறோம்.

அம்பாசமுத்திரம் ஒன்றியத்தில் உர விநியோக அட்டைகள் வழங்கல்.

*676. வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள ஊராட்சிகளுக்கு 1384-ம் பசலிக்கு இரசாயன உர விநியோக அட்டைகள் வழங்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்களுக்கு உரங்கள் வழங்கப்பட்டுள்ளன?

(உ) அதன் மூலம் எத்தனை ஏக்கர் நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம். வழங் கப்பட்டுள்ளன.

(இ) 9,732 இரசாயன உர அட்டைகள் விநியோகிக்கப் பட்டு, 8798 நபர்களுக்கு உரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தாமதமாக பயிர் செய்துள்ள மீதமுள்ள நபர்களுக்கு உரங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

(உ) 10,192 ஏக்கர்கள்.

திரு. ச. சங்குமுத்துத் தேவர் : இந்த மாதிரி கார்டு வழங்கப்படுவதில் ஊராட்சி வாரியாக கணக்கிருக்கிறதா ?

அத்துடன் இந்த கார்டுகள் வழங்கப்படுவதில் சில கிராமங்கள் இனும் கிராமமாக இருப்பதால் பயிர் எடுப்பு கணக்குப்படி உரக் கார்டுகள் வழங்கப்படுகின்றன. செவ்வந்திபுரம் போன்ற கிராமங் களிலே சரியாக கார்டுகள் வழங்கப்படாமல் இருந்து, பிறகு அது அரசின் கவனத்திற்குத் கொண்டு வரப்பட்டு உரம் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் செவ்வந்திபுரம் போன்ற சில கிராமங்களிலே உர அட்டைகள் வழங்கப்படவில்லை என்று சொன்னர்கள். இது கவனிக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

புதிய முட்டைகோஸ் ரகம்.

*677 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வின வுக்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் ''செப்டம்பர்'' என்ற புதிய முட்டைகோஸ் ரகம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ''செப்டம்பர்'' என்ற புதிய முட்டைகோஸ் பயிரிடும் விவசாயிகளுக்கு ஏதாவது ஊக்க ஊதியத் தொகை அளிக்க திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இந்த ''செப்டம்பர்'' முட்டைகோஸ் என்பதற்கான விதையை மேற்கு ஜெர்மனியி லிருந்து வரவழைத்து நீலகிரியிலே இருக்கும் ''இந்தோ-ஜெர்மன் ப்ராஜக்ட்டிலே'' ஊக்குவிக்கப்பட்டது. 1971-ல் நீலகிரியில்